(Chapter XXII code of Crl. Procedure)
In the Court of III Addl. District and Sessions Judge,
Tirupattur, Vlr. Dt.

| | | |
|---|---|---|
| **Civil Cases** | : | **MCOP.1/2018** |
| Deposition of witness of | : | **P.W.2** |
| Name | : | **ஆனந்தன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 15.11.2018 சாட்சி ஆஜர் சத்திய பிரமாணம் பெறப்பட்டு விசாரிக்க அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன்பேரில் ஆஜராகியுள்ளேன். காட்டப்படும் ம.சா.ஆ5 என்னுடைய ஓட்டுநர் உரிமம் என்றால், சரிதான். விபத்து சமயத்தில் நான் 108 ஆம்புலன்ஸில் ஓட்டுநராக பணிபுரிந்தேன். 18.10.2017-ல் விபத்து நடந்தது. அன்று நான் ஓட்டிய ஆம்புலன்ஸின் பதிவு எண்.TN20-G-1971 ஆகும். நான் கடந்த 2013-ம் ஆண்டிலிருந்து ஆம்புலன்ஸில் ஒட்டுநராக பணிபுரிகிறேன். திருப்பத்தூரிலிருந்து, அடுக்கும்பாறை மருத்துவமனைக்குச் செல்லும் வழி எனக்கு பரிட்சியமானதுதான், சுமார் 500 முறை அவ்வழியாக சென்றிருப்பேன். விபத்தன்று இரண்டு பெண்கள் பிரவசத்திற்காக எங்கள் ஆம்புலன்ஸில் ஏறினார்கள், அவர்களுடன், அவர்களது உறவினர்கள் மூவர் மற்றும் மருத்துவ உதவியாளர் ஒருவரும், நானும் ஆம்புலன்ஸில் பயணம் செய்தோம். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் முடியாது என்பதால், அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு பிரசவத்திற்காக அந்த இரண்டு பெண்களையும் ஆம்புலன்ஸில் அழைத்துச் சென்றேன். பிரசவத்திற்காக பெண்கள் ஆமபுலன்ஸில் பயணம் செய்தால், மிதமான வேகத்தில்தான் ஆம்புலன்ஸை

ஓட்டுவேன், அவ்வாறுதான் அன்றும் ஓட்டினேன். சைரன் போட்டுக்கொண்டுதான் போனேன். ரைசன் ஒலி 1 கி.மீ. தூரம் வரை கேட்கும். விபத்து மாலை 4 மணியளில் பொற்கோவில் தாண்டி, ஆவாரம்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகில் நடந்தது. நான் ஆம்புலன்ஸில் ஓட்டுநராக இருந்ததால், விபத்தை நேரில் பார்த்தேன். எனது ஆம்புலன்ஸில் பிரசவத்திற்கு வந்தவர்களுடன், உதவியாளராக வந்த நஸிபாபானு என்ற பெண் விபத்தில் இறந்துவிட்டார். நான் போய்க்கொண்டிருந்தபோது எதிரில் ஒரு பேருந்து வந்தது, பேருந்துக்கு பின்புறம் ஒரு இருசக்கர வாகனம் வந்து, பேருந்தை முந்திக்கொண்டு, வேகமாக வந்து எனது ஆம்புலன்ஸில் மோதிவிட்டது. அந்த இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை பார்த்துதான் சொல்ல முடியும். விபத்திற்கு எதிரில் வந்த இருசக்கர வாகனம்தான் காரணம். விபத்து குறித்து காவல் துறையினர் இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர்மீதுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆம்புலன்ஸில் பயணம் செய்தவர்களில் ஒருவர் இறந்துவிட்டார், மற்ற நான்குபேருக்கு காயம் ஏற்பட்டது என்றால், ஆம், எனக்கும்தான் காயம் ஏற்பட்டது.

**4-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :**

பிரசவத்திற்காக பெண்கள் ஆம்புலன்ஸில் பயணம் செய்தால், 40 கி.மீ. வேகத்திற்குமேல் ஓட்டமாட்டேன். 40 கி.மீ. வேகத்தில் செல்லும்போது, பிரேக் போட வேண்டுமென்றால், ஓட்டுநர் சிந்திக்கும் நேரம், பிரேக்கில் கால் வைத்து அழுத்தும் நேரம், அந்த நேரத்திற்கு ஏற்றவாறு இடைவெளி விட்டு, வாகனம் நிற்கும். 100 கி.மீ. வேகத்தில் வாகனங்கள் போகும்போது, 10 மீ இடைவெளி விட்டு பின்னால் செல்ல வேண்டும். 40 கி.மீ. வேகத்தில் சென்றால், பிரேக் அடித்தால் அந்த இடத்திலேயே நின்றுவிடும் என்றால், சரியல்ல, குறைந்தது 10 அடி அல்லது 15 அடி தூரம் சென்றுதான் நிற்கும். ஆம்புலன்ஸ் சைரன் ஒலி கேட்டாலே எதிரில் வரும் வண்டி எதுவாக இருந்தாலும், ஒதுங்கி வழி விடும் என்றால், ஆம். சம்பவ இடம் இரண்டு வண்டிகள் மட்டுமே போகக்கூடிய அளவிற்கு அகலமான சாலை. இருசக்கர வாகனம் எதிரில் வந்த பேருந்துக்கு பின்புறம் இருந்து, பேருந்தை முந்திக்கொண்டு, எனக்கு எதிரில் வந்தது.

ஆம்புலன்ஸ் சைரன் ஒலி கேட்டால், பேருந்துக்கு பின்புறம் இருசக்கர வாகனம், பேருந்தை முந்திச்செல்ல வாய்ப்பில்லை என்றால், சரிதான். நான் ஓட்டிச்சென்ற ஆம்புலன்ஸ், இருசக்கர வாகனத்தில் மோதி, எனது வலதுபுறம் இருந்த புளியமரத்தின்மீது மோதிதான் நின்றது என்றால், ஆம். ஆம்புலன்ஸ், இருசக்கர வாகனத்தில் மோதியவுடன் சாய்ந்து, இழுத்துக்கொண்டு போய், வலதுபுறம் இருந்த புளியமரத்தில் மோதி நின்றது. நான் ஓட்டிச்சென்ற ஆம்புலன்ஸில் பயணம் செய்து, விபத்தில் இறந்தவரின் வாரிசுகள்தான் நஷ்டஈடு கோரி, இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால், ஆம். எதிரில் வந்த பேருந்துக்கு எந்த சேதமும் இல்லை, அது ஆம்புலன்ஸை கடந்து நேராக போய்விட்டது. நான் சடன் பிரேக் போட்டதால்தான், ஆம்புலன்ஸ் இடதுபுறம் சாய்ந்து, இழுத்துக்கொண்டு போய், வலதுபுறம் இருந்த புளியமரத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. எதிரில் வந்த இருசக்கர வாகனத்தின்மீது ஏறியதால்தால், ஆம்புலன்ஸ் சாய்ந்தது. புளியமரத்தின்மீது மோதியதால்தான், எனது ஆம்புலன்ஸில் இருந்தவர் இறந்தார் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. நான் உண்மையிலேயே 40 கி.மீ. வேகத்தில் சென்றிருந்தால் எதிரில் இருசக்கர வாகனம் வந்திருந்தாலும், பிரேக் போட்டு நின்றிருக்க முடியும் என்றாலும், நான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் சென்றதால்தான், இருசக்கர வாகனத்தின்மீது மோதி, மீண்டும் புளியமரத்தின்மீது மோதி விபத்து நடந்திருக்கிறது என்றால், சரியல்ல. இவ்வழக்கு விபத்து குறித்து, இன்னும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால், தெரியாது. இவ்வழக்கு விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. இருசக்கர வாகனம் சாலையின் குறுக்கே வந்ததா என்றால், இல்லை, எதிரில்தான் வந்தது. விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்பதால்தான் நான் புகார் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. எனது அஜாக்கிரதையால்தான் விபத்து நடந்தது என்றாலும், அதனால் ஆம்புலன்ஸின் காப்பீட்டு நிறுவனம்தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றாலும், இருசக்கர வாகனத்தின் காப்பீட்டாளர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும், சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**